இன்று (29.10.09) சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தலைமையில் அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெற்

செ.வெ.எண்.770

நாள்.29.10.2009.

## பத்திரிக்கைச் செய்தி

அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் ஆய்வு கூட்டம் இன்று 29.10.09 (வியாழக்கிழமை) சென்னை மாவட்ட ஆட்சியர் வளாக கூட்டரங்கில் காலை 10.30 மணியளவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2009–10 ஆம் நிதியாண்டில் ஆதிதிராவிடர் நலத்துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 872 கோடியில் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ரூபாய் 671 கோடியும், அடிப்படை வசதிகளுக்காக ரூபாய் 200 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் இதுவரை பல்வேறு திட்டங்களுக்காக எவ்வளவு தொகை செலவிடப்பட்டது என்பது குறித்து திட்டவாரியாக ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகைகள் பள்ளி ஆரம்பித்த உடனேயே வழங்கப்பட வேண்டுமென்று அமைச்சரவர்கள் தெரிவித்தார். அவ்வாறு ஏதாவது மாவட்டங்களில் வழங்கப்படாமல் இருந்தால் அவற்றை இன்னும் 15 நாட்களுக்குள் வழங்கி அரசிற்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று அறிவுறுத்தினார். பின்னர் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கும் திட்டம் மற்றும் மயானப்பாதை ஏற்படுத்தி தரும் திட்டம் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை 31.12.2009 க்குள் செலவு செய்யும் வகையில் கருத்துருக்களை தயாரித்து செயல்படுத்த வேண்டுமென அமைச்சரவர்கள் அறிவுறுத்தினார்கள். மேலும் ஆதிதிராவிடர் காலனிகளுக்கு அடிப்படை வசதிகளை செய்து தரும் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகையினையும் குறிப்பிட்ட காலக்கெடுக்குள் பயன்படுத்தி அறிக்கை அனுப்ப வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது. மேலும் ஏழை ஆதிதிராவிடர் மக்களுக்கு தையல்இயந்திரம் வழங்கும் திட்டம், தேய்ப்பு

பெட்டி வழங்கும் திட்டம், தச்சு தொழிலாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கும் திட்டம் ஆகியவற்றினை செயல்படுத்தி 31.12.2009க்குள் அறிக்கை அனுப்ப வேண்டுமென அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். மேலும் கொத்தடிமை மறுவாழ்வு திட்டத்தின் கீழ் குழுக்களை அமைத்து அவர்களின் மறுவாழ்வு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையை பயன்படுத்திட வேண்டுமென அமைச்சரவர்கள் தெரிவித்தார். மேலும் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுத்து பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்க அவசர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இது தொடர்பான வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனை பெற்று தர நீதிமன்றங்களுக்கு உரிய ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்றும் அமைச்சரவர்கள் தெரிவித்தார். மேலும் துறையில் காலியாக உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்களை கண்டறிந்து அவற்றை இவ்வாண்டு இறுதிக்குள் நிரப்பிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அமைச்சரவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மை செயலாளர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை பொ.சிவசங்கரன்,இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு உ.ரவீந்திரன்.இ.ஆ.ப., மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஓம்.வே.கருப்பசாமி
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்
சிறப்புநிலை நேர்முக உதவியாளர்.



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.